**வீராணம் நீருக்காக காத்திருக்கும் விவசாயிகள்**

First Published : 31 Jul 2010 12:11:00 AM IST

சிதம்பரம், ஜூலை 30: கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் அருகே உள்ள வீராணம் ஏரியின் நீர் மட்டம் குறைந்தது. சம்பா சாகுபடிக்கான உழவுப்பணிகளை மேற்கொள்ள மேட்டூரிலிருந்து திறக்கப்படும் நீருக்காக விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

வீராணம் ஏரியின் நீர்மட்டம் மொத்தம் 47.5 அடியாகும். தற்போது போதிய மழை இல்லாததாலும், நீர்வரத்து இல்லாததாலும் வீராணம் ஏரியின் நீர்மட்டம் குறைந்து வெள்ளிக்கிழமை நிலவரப்படி 42 அடியாக உள்ளது.

ஏரியின் நீர்மட்டம் குறைந்துள்ளதால் ஏரியிலிருந்து சென்னை குடிநீருக்காக விநாடிக்கு 32 கனஅடி நீர் அனுப்பப்படுகிறது. ஏற்கெனவே விநாடிக்கு 76 கனஅடி நீர் அனுப்பப்பட்டு வந்தது. சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் தாலுகாக்களில்

1 லட்சம் ஏக்கரில் சம்பா சாகுபடி செய்ய மேட்டூரிலிருந்து திறந்துவிடப்படும் நீருக்காக விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

மேட்டூரிலிருந்து ஜூலை

28-ம் தேதி நீர் திறந்து விடப்பட்டது. அந்த நீர் கல்லணைக்கு வந்தபின்னர் அங்கிருந்து ஆகஸ்ட் 1-ம் தேதி நீர் திறந்துவிடப்படுவதால் கீழணைக்கு ஆகஸ்ட் 4-ம் தேதி நீர் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பின்னர் ஆகஸ்ட் 5 அல்லது 6-ம் தேதி கீழணையிலிருந்து வீராணம் ஏரிக்கும், வேளாண் பாசனத்துக்கும் நீர் திறந்துவிடப்படும் என பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**வறண்ட ஆறுகளால் வாடும் விவசாயிகள்**

First Published : 31 Jul 2010 12:00:00 AM IST



காஞ்சிபுரம் பகுதியில் வறண்ட நிலையில் இருக்கும் ஆறுகள்.

காஞ்சிபுரம், ஜூலை 30: காஞ்சிபுரத்தில் ஆறுகள் மற்றும் ஏரி, குளங்கள் வறண்ட நிலையில் உள்ளதால் பயிர்களுடன் சேர்ந்து விவசாயிகளும் வறுமையில் வாடி வருகின்றனர்.

÷காஞ்சிபுரம் பகுதியில் தொழிற்சாலைகள் நிறைந்து காணப்பட்டாலும் பல்வேறு கிராமப்புற பகுதிகளில் விவசாயமும் தீவிரமாக நடைபெற்று வருகிறது. காஞ்சிபுரம் மாவட்டத்தை பொருத்தவரையில் 1,45,966 ஹெக்டேரில் நெல் பயிரிடப்படுகிறது.

÷28,766 ஹெக்டேரில் மணிலாவும், 7,586 ஹெக்டேரில் கரும்பும் பயிரிடப்படுகிறது. இந்நிலையில் இந்த ஆண்டு வறட்சிக் காரணமாக விவசாயத்துக்கு போதிய தண்ணீர் இல்லை.

÷ஆடிப்பெருக்கில் பெருக்கெடுத்து ஓட வேண்டிய ஆறுகள், ஏரி, மற்றும் குளங்கள் அனைத்தும் வறண்டு கிடக்கின்றன. இதனால் இந்த ஆண்டு இந்த எண்ணிக்கையில் கணிசமாக குறைவதற்கு வாய்ப்புகள் உள்ளதாகவே விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் பலர் கூறுகின்றனர்.

÷மேலும் ஆறுகளில் மணல் அள்ளப்படுவதால் நிலத்தடி நீர் மட்டமும் காஞ்சிபுரம் பகுதியில் பெருமளவு குறைந்துவிட்டது. இதனால் கிணறுகளில் நிலத்தடி நீர் மட்டம் தொடர்ந்து குறைந்து கிணற்று நீரையும் விவசாயத்துக்கு சொற்ப அளவில்தான் பயன்படுத்தக்கூடிய சூழ்நிலை உள்ளது.

÷இதனால் பல விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாமல் தங்கள் நிலங்களை தரிசாக போட்டு வைத்துள்ளனர். மேலும் சில விவசாயிகள் பயிர் செய்த வயல்களையும் காயப்போடும் சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

÷இது குறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் கே.நேரு கூறுகையில், "காஞ்சிபுரத்தில் வறட்சியால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். பயிரிடாமல் உள்ள விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.10 ஆயிரம் நஷ்ட ஈடு வழங்க வேண்டும். பயிர் செய்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் நஷ்ட ஈடு வழங்க வேண்டும்.

÷மழைக் காலங்களில் பெய்யும் நீரை தேக்கி வைக்கும் வகையில் ஏரி, குளங்களை ஆழப்படுத்த வேண்டும். மழைநீர் வீணாகாமல் ஏரிக்கு வரும் வகையில் வரத்து வாய்க்காலை தூர்வார வேண்டும்.

÷கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு மானியத்தில் வழங்கும் கடனுதவிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும்' என்றார்.

÷மேலும் விவசாயத் துறையில் அனுபவம் பெற்ற சிலர் கூறும்போது, "மக்காச்சோளம் போன்ற வறட்சியை தாங்கி வளரும் பயிர்கள் அதிக லாபம் தரக் கூடியவை.

÷விவசாயத் துறையினர் விவசாயிகளிடம் நேரடியாகச் சென்று வறட்சியை தாங்கி வளரக் கூடிய பயிர்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

÷விவசாயிகள் விவசாயத் தொழிலை கைவிட்டு விவசாயிகள் வேறு தொழிலுக்கு மாறுவது, வரும் காலங்களில் உணவுப் பொருள் உற்பத்தியில் பெரும் பற்றாக்குறை ஏற்படுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டு விடும்' என்கின்றனர்.

÷வறட்சியால் வாடும் விவசாயிகளை ஊக்குவப்பதற்கு வழங்கப்படும் சலுகைகள் குறித்து காஞ்சிபுரம் வேளாண்மைத் துறை உதவி இயக்குநர் கே.அய்யாதுரையிடம் கேட்டபோது அவர் கூறியது:

÷காஞ்சிபுரம் பகுதியில் விவசாயிகளுக்கு பல்வேறு நலத் திட்டங்களை விவசாயத்துறை மூலம் செயல்படுத்தி வருகிறோம். நீர்வள, நிலவளத் திட்டத்தின் கீழ் 310 ஹெக்டர் செம்மை நெல் சாகுபடி மூலம் பயிர் செய்யவும், 26 ஹெக்டேர் பயறு வகைகள், 40 ஹெக்டர் கரும்பு ஆகியவைகள் பயிர் செய்ய ஹெக்டேருக்கு ரூ.3 ஆயிரம் மானியம் வழங்குகிறோம்.

÷மேலும் ரூ.2260 மதிப்புள்ள விதை சேமிப்பு கலன் வாங்குவதற்கு சிறு விவசாயிகளுக்கு ரூ.1000 மானிய உதவியும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு ரூ.1300 மானிய உதவியும் வழங்கப்படுகிறது என்றார்.

**கலப்படம் அதிகரிக்கும் கலப்பு உரங்கள்**

First Published : 31 Jul 2010 12:00:00 AM IST

கடலூர், ஜுலை 30: கடலூர் மாவட்டத்தில் கலப்பு (மிக்ஸர் உரங்கள்) உரங்களில் கலப்படம் அதிகரித்து வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கிறார்கள்.

÷வேளாண்மையில் ரசாயன உரங்களின் பயன்பாடு அதிகரித்து வருகிறது. இயற்கை உரங்கள் குறித்து விழிப்புணர்வுப் பிரசாரங்கள் அதிகரித்து வரும் நிலையிலும், விவசாயிகளிடமும் ரசாயன உரங்கள் மீதான மோகம் குறைந்ததாகத் தெரியவில்லை.

இதனால் ரசாயன உரங்களின் பயன்பாடு அதிகரித்து, கலப்படமும் அதிகரித்து வருகிறது. தரமற்ற உரங்களால் ஏற்படும் பாதிப்பு அறுவடையின் போதுதான் விவசாயிகளால் உணர முடிகிறது.

÷வேளாண்மையில் தழைச்சத்து (நைட்ரஜன்), மணிச்சத்து (பாஸ்பரஸ்), சாம்பல் சத்து (பொட்டாஷ்) ஆகிய மூன்றும் பேரூட்டச் சத்துக்களாகக் கருதப்படுகிறது. இவற்றுக்கான ரசாயன உரங்களான யூரியா, சூப்பர் பாஸ்பேட், மியூரேட் ஆப் பொட்டாஷ் ஆகியவை அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

÷இவ் உரங்கள் தனித்தனியாகவும், மூன்றையும் குறிப்பிட்ட விகிதங்களிலும் கலந்து, கலப்பு உரங்களாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. பயிர்களுக்கு ஏற்றவாறு 14 வகையான கலப்பு உரங்களை (காம்ப்ளக்ஸ் உரங்கள்) தயாரித்து விற்பனை செய்ய தமிழக அரசு அனுமதி அளித்து இருக்கிறது.
÷உரங்களை பெரிய உரத் தொழிற்சாலைகளும் உற்பத்தி செய்து விநியோகிக்கின்றன. அதே நேரத்தில் மிக்ஸர் உரங்கள் என்ற பெயரிலும், சாதாரண தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்க்கப்படுகின்றன.
கலப்பு உரங்களைத் தயாரித்து விநியோகிக்கும் நிறுவனங்கள் தமிழகத்தில் விழுப்புரம், திருவண்ணாமலை, கடலூர், வேலூர், சேலம் ஆகிய மாவட்டங்களில் அதிகம் உள்ளன. கடலூரில் 2-ம், விழுப்புரத்தில் 25 நிறுவனங்களும் உள்ளன. இவை குடிசைத் தொழில்போல் பெருகிவருவதாக விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.
÷பொதுவாக முக்கிய 3 உரங்களில், சாதாரண உப்பு, மணல், களிமண், டோலமைட் என்ற மண், ஜிப்ஸம், பாறை பாஸ்பேட், செங்கல்தூள், மெக்னீஷியம் சல்ஃபேட் போன்ற பொருள்கள் கலப்படம் செய்யப்படுவதாகக் கூறும் விவசாயிகள், மிக்ஸர் உரங்கள் என்று கூறப்படும் காம்ப்ளக்ஸ் உரங்களில்தான் கலப்படம் அதிகரித்து வருவதாகவும் கவலை தெரிவிக்கிறார்கள்.
÷÷இதுகுறித்து விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பின் அமைப்புச் செயலர் ரவீந்திரன் கூறுகையில், "கடலூர் மாவட்டத்தில் 1000க்கும் மேற்பட்ட தனியார் உர விற்பனை நிலையங்கள் உள்ளன. இவற்றில் விற்பனை செய்யப்படும் மிக்ஸர் உரங்கள் கலப்படம் நிறைந்ததாகவும், தரமற்றதாகவும் உள்ளன. இந்த உரங்கள் பற்றி விவசாயிகளுக்கு சரியான விழிப்புணர்வு இல்லை.
÷விலையிலும் கம்பெனி கலப்பு உரங்களுக்கும் மிக்ஸர் உரங்களுக்கும் பெரிய வித்தியாசம் இல்லை. வேளாண் துறை உரக் கட்டுப்பாடு அதிகாரிகள், மேலும் தீவிரமாக இந்த உரங்களை கண்காணித்து மாதிரிகளை சேகரித்து, தர நிர்ணய ஆய்வுக் கூடங்களுக்கு அனுப்ப வேண்டும். தனியார் உர விற்பனை நிலையங்கள் அதிகம் உள்ள கடலூர் மாவட்டத்தில், அரசு உர ஆய்வுக்கூடம் அமைக்க வேண்டும்' என்றார்.
÷இதுகுறித்து வேளாண் உதவி இயக்குநர் (உரங்கள் தரக் கட்டுப்பாடு) அலுவலகத்தில் விசாரித்தபோது ஆண்டுதோறும் அனைத்து ரக உரங்களிலும் மாதிரிகள் எடுத்து ஆய்வுக் கூடத்துக்கு அனுப்புகிறோம். கடந்த ஆண்டு 750 மாதிரிகள் எடுத்து ஆய்வுக்கு அனுப்பினோம். இதில் 25 மாதிரிகளில் மட்டும் தரக்குறைவு கண்டறியப் பட்டது. தரக்குறைவின் அளவுக்கு ஏற்ப லைசென்ஸ் ரத்து, குறிப்பிட்ட காலத்துக்கு லைசென்ஸ் நிறுத்தி வைப்பு உள்ளிட்ட தண்டனைகள் வழங்கப்படுகின்றன.
÷கலப்பு மற்றும் மிக்ஸர் உரங்களில் குறைபாடுகள் அதிகம் காணப்படுவதால், அவற்றில் மட்டும் 40 சதவீத மாதிரிகள் சேகரித்து, ஆய்வுக்கு அனுப்ப வேண்டும் என்று, வேளாண் இயக்குர் உத்தரவிட்டு இருக்கிறார் என்றும் தெரிவித்தனர்.

தினமலர்

**செம்மை நெல் சாகுபடி எம்.எல்.ஏ., நேரில் பார்வை**

பதிவு செய்த நாள் : ஜூலை 31,2010,02:50 IST

வாலாஜாபாத் : வாலாஜாபாத் வட்டார வேளாண்மைத் துறை சார்பில் செம்மை நெல் சாகுபடி திட்டத்தில் நடவு செய்யப்பட்ட விளைச்சலை எம்.எல்.ஏ., நேரில் சென்று பார்வையிட்டார்.காஞ்சிபுரம் அடுத்த தாங்கி கிராமத்தில் சடகோபன் நிலத்தில் செம்மை நெல் சாகுபடி திட்டத்தின் கீழ் இரண்டு ஏக்கர் நிலத்தில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. நேற்று முன் தினம் காலை 11 மணிக்கு எம்.எல்.ஏ., சுந்தர், வேளாண்மை உதவி இயக்குனர் பழனிவேலு, வேளாண்மை அலுவலர் முத்துலட்சுமி, துணை அலுவலர் கருப்புசாமி ஆகியோர் விளைச்சல் நிலத்தை நேரில் சென்று பார்வையிட்டனர். செம்மை நெல் சாகுபடி குறித்து வேளாண்மை உதவி இயக்குனர் பழனிவேலு கூறும்போது, செம்மை நெல் சாகுபடி திட்டத்தில் குறைந்த அளவு விதைகளில் அதிக மகசூல் பெறலாம். நெற்பயிர்களுக்கு அதிகமாக தண்ணீர் தேவைப்படாது. பயிர்கள் இடைவெளி விட்டு நடவு செய்யும் போது பயிர்களில் எற்படும் களைகளை எளிதாக அகற்றலாம். ஒரு ஏக்கருக்கு குறைந்தது நான்கு முதல் ஐந்து டன் எடை வரை மகசூல் பெறலாம் .விவசாயிகளுக்கு சாதாரண நடவு செய்வதில் எற்படும் லாபத்தை விட கூடுதல் லாபம் கிடைக்கும் என்றார்.

**வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் பொது சேவை மையம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 31,2010,02:48 IST

பேரம்பாக்கம் : திருவள்ளூர் மாவட்டத்தில் முதன் முறையாக பேரம்பாக்கம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் குறைந்த செலவில் கிராம விவசாயிகள் மற்றும் மக்கள் பயன்பெறும் வகையில் பொது சேவை மையம் துவக்கப்பட்டு உள்ளது.இம்மையத்தில் கிராம விவசாயிகளுக்கு சிட்டா வழங்குதல், வேலைவாய்ப்பு பதிவு மற்றும் புதுப்பித்தல், அரசு விண்ணப்ப படிவங்கள் எடுத்தல், இ-மெயில் அனுப்புதல், மொபைல் ரீசார்ஜ் செய்தல், கலர் ஜெராக்ஸ் எடுத்தல் ஆகிய பணிகள் நடந்து வருகின்றன.மேலும் பள்ளி, கல்லூரி தேர்வு முடிவுகள், ஜாதகம் அறிதல், திருமண பொருத்தம் அறிதல், வேலை வாய்ப்பு பயிற்சி, படிவம் தயாரித்து

வழங்குதல், சி.டி., பிரதி எடுத்தல், புகைப்படம் எடுத்தல், எல்.ஐ.சி பிரீமியம் செலுத்துதல் ஆகிய பணிகளும் செய்யப்படுகின்றன.இதை கிராம மக்கள் மற்றும் விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளலாம். இத்தகவலை கூட்டுறவு கடன் சங்கத்தின் தனி அலுவலர் காத்தவராயன், செயலர் வாசுதேவன் ஆகியோர் தெரிவித்தனர்.

**விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 31,2010,03:04 IST

திருவள்ளூர்: திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் டி.பி.ராஜேஷ் தலைமையில் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடந்தது.மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்)இரா.ராஜகோபால் வரவேற்றார். வேளாண்மைத் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து வேளாண்மை இணை இயக்குனர் கோ. சீனிவாசலு விளக்கிக் கூறினார். கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் எஸ்.சோமசுந்தரம் மற்றும் அனைத்துத் துறை உயர் அலுவலர்களும் கலந்து கொண்டனர். கணினி பட்டா வழங்குதல், உரங்களை அதிக விலைக்கு விற்காமல் தடுத்தல், கால்வாய்களை மழைக்காலத்திற்கு முன்னதாக தூர் வாரி சீரமைத்தல் மற்றும் பல கோரிக்கைகளை விவசாயிகள் எடுத்துரைத்தனர்.

விவசாயிகளுக்கு கணினி பட்டா சிரமமின்றி கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என்றும், விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் ஒரு சில இடங்களில் அதிக விலைக்கு விற்பனை செய்வதை தடுத்து நிறுத்த தனிக்குழு அமைத்து கண்காணிக்க வேண்டும் என்றும் வேளாண்மை இணை இயக்குனருக்கு கலெக்டர் ராஜேஷ் உத்தரவிட்டார். விவசாயிகள் கோரிக்கைகளுக்கு தக்க பதில்களை தவறாமல் விரைந்து அனுப்பும் படி அனைத்து துறை அலுவலர்களுக்கும் கலெக்டர் உத்தரவிட்டார்.

**அதிவீரிய விதையால் அமோக மகசூல்: கம்பு சாகுபடியாளர்கள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஜூலை 31,2010,03:03 IST

கும்மிடிப்பூண்டி : மானாவாரி பயிரான கம்பு சாகுபடியில் புதிதாக அதிவீரிய (ஹைபிரீட்) ரக விதைகளை பயன்படுத்தி, அதிக மகசூல் கிடைத்துள்ளதால், செதில் பாக்கம் சாகுபடியாளர்கள் மகிழ்ச்சியில் உள்ளனர்.கும்மிடிப்பூண்டி அடுத்த மாதர்பாக்கம் அருகே உள்ளது செதில்பாக்கம் கிராமம். இங்கு, 250 ஏக்கரில் சீசனுக்கு ஏற்றபடி கம்பு சாகுபடி செய்து வருகின் றனர்.மானாவாரி

பயிரான கம்பு சாகுபடியால், அதிக செலவு மற்றும் பராமரிப்பு இல்லாத தால், ஓரளவுக்கு லாபம் கிடைத்தாலும் பரவாயில்லை என்ற எண்ணத்தில் வருடா வருடம் கம்பு சாகுபடியை தொடர்ந்து வந்தனர்.இந்த ஆண்டு, ஆந்திர மாநிலம் காளஹஸ்தி மற்றும் நாகலாபுரம் ஆகிய பகுதிகளில் இருந்து புதிய ரக ஹைபிரீட் விதைகளை வாங்கி வந்தனர்.

ஒன்றரை கிலோ கொண்ட ஒரு பாக்கெட்டை ரூபாய் 180க்கு வாங்கினர்.ஒரு ஏக்கருக்கு ஒரு பாக்கெட் என்ற கணக்கில் விதைகள் தூவப்பட்டன. அதன் பின் 45 நாட்கள் கழித்து களை எடுத்தனர்.நூறு நாள் பயிரான கம்பு சாகுபடி, தற்போது 75 நாட்கள் கடந்த நிலையில் செதில்பாக் கம் கிராமத்தில் கம்பு சாகுபடியாளர்கள் பெரும் மகிழ்ச்சியில் ஆழ்ந்துள்ளனர்.பொதுவாக இதர ரக விதைகள் மூலம் ஒரு விதைக்கு ஒரு கதிர் என்ற அளவில் விளைச்சல் இருக்கும். இவ்வருடம் ஹைபிரீட் ரக விதைகள் பயன்படுத்தியதன் மூலம் ஒரு விதைக்கு 6 முதல் 10 கதிர் வரை விளைச்சல் கிடைத் துள்ளது. இதனால் அப்பகுதி கம்பு சாகுபடியில் மகசூல் பல மடங்கு பெருகியுள்ளது.

செதில்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி தணிகாசலம் கூறியதாவது: வருடம்தோறும் எனக்கு சொந்தமான ஏழு ஏக்கர் நிலத்தில் ஆடிப் பட்டமாக கம்பு சாகுபடி செய்வது வழக்கம். அறுவடையின் போது ஒரு ஏக்கருக்கு நான்கு மூட்டை கம்பு கிடைப்பது அரிதாக இருந்தது. ஒரு மூட்டை என்பது 100 கிலோ. இந்த ஆண்டு ஹைபிரீட் ரக விதைகள் பயன்படுத்தியதன் மூலம் ஒரு ஏக்கருக்கு 12 மூட்டை கம்பு கிடைத்துள்ளது. மானாவாரி பயிராக இருந்தாலும் களை எடுத்தல், உரமிடுதல், ஏர் உழுதல், அறுவடை உள்ளிட்ட செலவுகள் போக ஓரளவு லாபம் பார்த்த நாங்கள் இம்முறை அதிக லாபம் பார்த்து வருகிறோம்.

**மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி**

திவு செய்த நாள் : ஜூலை 31,2010,03:03 IST

திருவள்ளூர் : திருவள்ளூர் மாவட்டத்தில் தினமும் பெய்து வரும் பலத்த மழையினால் விவசாயிகள் மகிழ்ச்சியில் திளைத்துள்ளனர்.திருவள்ளூர் மாவட்டத்தில் நான்கு நாட்களாக தினமும் இரவு நேரங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. குறிப்பாக திருவள்ளூர், பேரம்பாக்கம், ஊத்துக்கோட்டை, பொன்னேரி, திருத்தணி, பள்ளிப்பட்டு உட்பட மாவட்டத்தின் பல பகுதிகளில் மாலை 6 மணியானதும் கருமேகங்கள் கூடி காற்றுடன் பலத்த மழை பெய்து வருகிறது.இந்த மழையினால் இப்பகுதி விவசாயிகளின் கிணறுகளில் நிலத்தடி நீர் உயர்ந்துள்ளது. இந்த நீரை

வைத்து வரும் பருவத்திலும் சம்பா நெல் உற்பத்தி செய்ய முடியும் என விவசாயிகள் கூறுகின்றனர்.மாவட்டத்தில் மழையளவு (மி.மீ.,ல் வருமாறு):சோழவரம்:80, கும்மிடிப்பூண்டி:60, ஊத்துக்கோட்டை: 55, தாமரைப்பாக்கம்: 53, அம்பத்தூர்: 49, திருவள்ளூர்: 30, பூந்தமல்லி: 23, பூண்டி: 23, திருத்தணி: 16, செம்பரம்பாக்கம்: 13, பொன்னேரி: 9, பள்ளிப்பட்டு: 1.

**மரவள்ளியில் மாவுப்பூச்சி தாக்குதல்கட்டுப்படுத்த அதிகாரி அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஜூலை 31,2010,02:59 IST

நாமக்கல்: தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கை:மோகனூர் வட்டாரத்தில் ஏழு மாத வயதுள்ள மரவள்ளி பயிர் 700 ஹெக்டேரில் பயிரிடப்பட்டுள்ளது. அவற்றில் பரவலாக மாவுப்பூச்சி தாக்குதல் உள்ளது. விவசாயிகள் அனைவரும் கூட்டு முயற்சி எடுத்து மாவுப் பூச்சியை ஆரம்ப நிலையில் கட்டுப்படுத்த வேண்டும்.மாவுப் பூச்சிகள் பயிரின் தண்டுகள், இலைகளின் அடிப்பாகம் மற்றும் இலைக்காம்பு இடுக்குகளில் காணப்படும். மாவுப் பூச்சிகள் மெழுகு போன்ற மெல்லிய வெள்ளை நிற உறையில் சூழ்ந்து காணப்படும். மாவுப் பூச்சிகள் வெளியேற்றும் தேனை உண்ண எறும்புகள் ஊர்ந்து செல்வதைக் காணமுடியும். இலையின் மேற்பரப்பில் கரும்பூஞ்சாணம் படர்ந்து காணப்படும்.இப்பூச்சிகளை கட்டுப்படுத்த வயல்களில் களைச் செடிகள் இன்றி வைத்துக் கொள்ள வேண்டும். பாதிப்பு மிகக் குறைவாக இருந்தால் பாதிக்கப்பட்ட இலைத் தண்டுகளை பாலித்தின் பைகளில் சேகரித்து அவற்றை எரித்து அடக்க வேண்டும். நோய் தாக்கப்பட்ட வயலில் இருந்து மற்ற வயல்களுக்கு நீர்பாசனம் செய்வதை தவிர்க்க வேண்டும்.நோய் தாக்கப்பட்ட வயலில் இருந்து மற்ற வயல்களுக்கு நீர்பாசனம் செய்வதை தவிர்க்க வேண்டும். வேளாண் அலுவலர்கள் அறிவுத்தலின்பேரில் ஒரே பூச்சிக் கொல்லி மருந்தினை திரும்ப திரும்ப உபயோகப்படுத்தாமல் தேவைக்கு ஏற்ப 15 நாள் இடைவெளியில் சுழற்சி முறையில் வெவ்வேறு பூச்சிக் கொல்லிகளை பயன்படுத்த வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விளைச்சல் இருந்தும் விலை இல்லை கி.புரம் தென்னை விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : ஜூலை 31,2010,04:24 IST

லாலாப்பேட்டை: கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் யூனியன் பகுதியில் தேங்காய் விளைச்சல் அதிகரித்தும், போதுமான விலை இல்லாததால் விவசாயிகள் கலக்கமடைந் துள்ளனர்.கிருஷ்ணராயபுரம் யூனியன் பகுதியான, கிருஷ்ணராயபுரம், மணவாசி, மாயனூர், கட்டளை, திருக்காம்புலியூர், மகாதானபுரம், கருப்பத்தூர், லாலாப்பேட்டை, வல்லம் ஆகிய

வாய்க்கால் பாசன பகுதிகளில் தென்னை சாகுபடி அதிகமாக உள்ளது.இங்கு முற்றிய தேங்காய் 45 முதல் 60 நாட்களுக்குள் வெட்டப்படுகிறது. தேங்காயுடைய பருமனை பொறுத்து ரகம் பிரிக்கப்பட்டு விலை நிர்ணயிக்கப்படுகிறது. முதல் ரக தேங்காய் ஸ்ரீரங்கம், மதுரை, பல்லடம், கோவை உள்ளிட்ட மொத்த சந்தைக்கு அனுப்பப்படுகிறது.கடைசி ரக தேங்காய் மட்டும் உள்ளூர் சந்தையில் விற்கப்படுகிறது. ஆனால், தேங்காய் பறிக்க அளிக்கப்படும் கூலி தொகை, மரத்தை பராமரிக்க ஆகும் செலவை ஒப்பிடும்போது, தேங்காய்க்கு கிடைக்கும் விலை, விவசாயிகளை கவலை கொள்ள செய்துள்ளது.கிருஷ்ணராயபுரம் காவிரி டெல்டா பாசன விவசாயிகள் சங்க செயல் தலைவர் ராஜாராம் கூறியதாவது:கிருஷ்ணராயபுரம் பகுதியில் பெரும்பான்மை விவசாயிகள் தென்னை சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். தற்போது, கடந்த ஆண்டை விட கூடுதலாக தேங்காய் சாகுபடியாகியும், போதிய அளவு விலை விவசாயிகளுக்கு கிடைக்கவில்லை.தென்னையில் ஏறி காய் பறிக்க கூலியாக காய் ஒன்றுக்கு 1.25 ரூபாய் அளிக்கப்படுகிறது. ஆயிரம் தேங்காய் பறிக்க, 1,125 ரூபாய் செலவு செய்யப்படுகிறது. மொத்தமாக வியாபாரிகளுக்கு தேங்காய் விற்பதற்கு 1,000 தேங்காயுடன், கூடுதலாக 150 காய் கொடுக்க வேண்டும். தரம் வாரியாக பரிக்கப்பட்டு நல்ல அளவில் உள்ள தேங்காய்க்கு தலா 2.50 ரூபாய் கிடைக்கும்.இதனால், விவசாயிக்கு ஆயிரம் தேங்காய்களுக்கு 2,500 ரூபாய் கிடக்கிறது. ஆனால், மரம் ஏறி பறிப்பதுக்கு 1,125 ரூபாய் கூலியாக மட்டும் செலவாகிறது. தற்போதுள்ள கூலித்தொகை, மின் தட்டுப்பாடு, உரம் விலை ஆகியவற்றை கணக்கிடும்போது தென்னை விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.இவ்வாறு அவர் கூறினார்.கிருஷ்ணராயபரம் உதவி வேளாண்மை இயக்குனர் பாலகிருஷ்ணன் கூறுகையில், ""தென்னை வளர்ப்புக்கு கேரளாவிலுள்ள கொச்சி தேசிய வேளாண்மை தேங்காய் அபிவிருத்தி கழகம் மூலம் ஆண்டுக்கு 4,000 ரூபாய் வரை இரண்டு ஆண்டுக்கு மானியம் வழங்கப்படுகிறது. விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்," என்றார்.

**கூட்டுறவு சங்கங்களில் ரூ.150 கோடி பயிர்க்கடன்:விவசாயிகள் கூட்டத்தில் கலெக்டர் தகவல்**

பதிவு செய்த நாள் : ஜூலை 31,2010,03:17 IST

கோவை:""இந்த ஆண்டு ஏப்ரல் முதல் தேதியில் இருந்து ஜூன் 30 வரை கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக, 323 பேருக்கு 150 கோடி ரூபாய் பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது; 398 பேருக்கு முதலீட்டுக் கடனாக ஒரு கோடியே 93 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது,"என, கலெக்டர் உமாநாத் தெரிவித்தார். வேளாண்மை உற்பத்திக்குழு மற்றும் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது.இக்கூட்டத்தில் விவசாயிகள் பேசுகையில், "தற்போதுள்ள பால் கொள்முதல் விலை கட்டுப்படியாவதில்லை. கொள்முதல் விலையை உயர்த்த

நடவடிக்கை எடுக்க வேண்டும். அன்னூர் பகுதி விவசாய நிலங்களிலும், கிணறுகளிலும் இரும்பு உருக்காலைக் கழிவுகள் கொட்டப்படுகின்றன. இதனால் விவசாயமும் தண்ணீரும் மாசடைகிறது. உடனடியாக இதை தடுத்து நிறுத்த வேண்டும்.

"பி.ஏ.பி., கால்வாய்களில் போதுமான அளவு தண்ணீர் வரத்து இல்லை. தண்ணீர் இல்லாததால் விவசாயம் பாதிக்கப்படுகிறது. வருவாய் அலுவலகங்களில் பட்டா மாறுதல், பட்டாவில் பெயர் சேர்த்தல் ஆகிய பணிகள் கம்ப்யூட்டர் மூலம் நடக்கிறது. இதில் ஏராளமான முறைகேடுகள் நடக்கின்றன. உடனடியாக இதை தடுத்து நிறுத்த வேண்டும்' என்றனர்.

இதற்கு பதிலளித்து, கலெக்டர் உமாநாத் பேசியதாவது:பிற மாவட்டங்களை விட கோவை மாவட்டத்தில் பால் கொள்முதலுக்கு நான்கு மடங்கு கூடுதல் விலை அளிக்கப்படுகிறது. அரசு நிர்ணயித்த கட்டணத்தைவிட இங்கு அதிக விலைக்கு பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இனி கொள்முதல் விலையை அரசு முடிவு எடுக்கும்போது, அதற்குரிய விலை வழங்கப்படும். அன்னூர் பகுதி கிணறுகளில் இரும்பு உருக்காலைக் கழிவுகள் கொட்டப்படுவது பற்றிய புகார் பற்றி, மாசுக்கட்டுப்பாடு வாரியம் மூலம் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கு அப்பகுதியில் தனியாக ஒரு சுத்திகரிப்பு பிளான்ட் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பழைய பாசன திட்டங்களுக்கு உலக வங்கிதான் நிதியுதவி அளித்து வந்தது. இந்த ஆண்டு தமிழக அரசு 10 கோடி ரூபாய் நிதியுதவி அளித்து, இத்திட்டம் சிறப்பாக நடைபெறுவதை தொடர்ந்து கண்காணித்து வருகிறது. அனைத்து கிராமங்களிலும் கால்வாய் பராமரிப்புக்கு உதவ மாவட்ட நிர்வாகம் தயாராக உள்ளது. பதிவேடுகளில் இல்லாமல் கம்ப்யூட்டர் மூலம் பட்டா மாற்றம், பெயர் சேர்ப்பது கிரிமினல் குற்றமாக கருதி தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.மின் வாரியத்தின் கீழ் விவசாய கிணறுகளுக்கு இணைப்பு வழங்குவதற்கான பெயர் மாற்றம் செய்ய, நில உரிமை சான்றிதழ் மின்வாரியத்தால் கேட்கப்படுகிறது. இதற்கு சிட்டாவையே ஆவணமாக எடுத்துக் கொள்ள மின்வாரிய அதிகாரிகள் முன்வர வேண்டும்.இந்த ஆண்டு ஏப்ரல் முதல் தேதியில் இருந்து ஜூன் 30 வரை கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக, 323 பேருக்கு 150 கோடி ரூபாய் பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. 398 பேருக்கு முதலீட்டுக் கடனாக ஒரு கோடியே 93 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. சரக்கீட்டு கடனாக 69 பேருக்கு 81 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.இவ்வாறு, கலெக்டர் உமாநாத் கூறினார்.

**மானிய விலையில் பயறு விதைகள்**

பதிவு செய்த நாள் : ஜூலை 30,2010,22:33 IST

திருச்சுழி:திருச்சுழி பகுதி விவசாயிகளுக்கு தேசிய பாதுகாப்பு திட்டத்தின் கீழ், பாசிபயறு விதைகள் மானிய விலையில் வழங்கப்படுகிறது. துவரை உற்பத்தியை பெருக்க சலுகைகள் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ், இறவையில் துவரை சாகுபடி செய்யும்

விவசாயிகளுக்கு எக்டேருக்கு இடு பொருட்கள் மானிய விலையில் தரப்பட உள்ளது என்று ரெட்டியபட்டி வேளாண் உதவி இயக்குநர் ராஜேந்திரன் தெரிவித்தார்.

**பட்டுப்புழு வளர்ப்பில்தென்காசி விவசாயி சாதனை**

பதிவு செய்த நாள் : ஜூலை 31,2010,03:42 IST

தென்காசி :பட்டுப்புழு வளர்ப்பில் தென்காசி விவசாயி அதிக வருமானம் பெற்று சாதனை படைத்தார்.விவசாயம் சார்ந்த தொழிலாக பட்டுப்புழு வளர்ப்பு விளங்குகிறது. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் விவசாயிகள் அரை ஏக்கர், ஒரு ஏக்கர் என குறைந்த பரப்பளவில் மல்பரி சாகுபடி செய்தனர். ஆனால் தற்போது புழு வளர்ப்பிற்கு என்று தனி மனை அமைத்து 2 முதல் 5 ஏக்கர் பரப்பளவில் மல்பரி சாகுபடி செய்து பட்டு பண்ணைகள் அமைத்து பட்டுப்புழு வளர்ப்பு தொழிலில் பெருமளவு விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.தற்போது நவீன தொழில் நுட்பங்களை கடைபிடித்து தண்டு அறுவடை முறை புழு வளர்ப்பு மேற்கொண்டு கூலி ஆட்களின் செலவினை குறைத்து தனியார் இளம்புழு வளர்ப்பு மையத்தில் இருந்து இளம்புழுக்களை வாங்கி புழு வளர்ப்பு காலத்தை 20 நாட்களாக குறைத்தும் லாபகரமாக இத்தொழிலை விவசாயிகள் செய்து வருகின்றனர்.நெல்லை மாவட்டத்தில் சுமார் 531 விவசாயிகள் ஆயிரத்து 289 ஏக்கர் பரப்பளவில் மல்பரி சாகுபடி செய்து பட்டு தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். பட்டு விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் மஞ்சள் இன பட்டு கூடுகள் கிலோ ஒன்றுக்கு 200 ரூபாய் முதல் 220 ரூபாய் வரையும், வெள்ளை இன பட்டு கூடுகள் கிலோ ஒன்றுக்கு 250 ரூபாய் முதல் 280 ரூபாய் வரைக்கும் தென்காசி நன்னகரம் அரசு பட்டு கூடு அங்காடியில் விற்பனை செய்யப்படுகிறது.தென்காசி கீழப்புலியூரை சேர்ந்த சங்கரன்பிள்ளை என்பவர் 2 ஏக்கர் பரப்பளவில் மல்பரி சாகுபடி செய்து நவீன முறையில் பட்டுப்புழு வளர்ப்பினை மேற்கொண்டார். தென்காசி ஏ.எல்.என்.இளம்புழு வளர்ப்பு மையத்தில் 200 பட்டு முட்டை தொகுதிகளுக்கான புழுக்களை வாங்கி புழு வளர்ப்பு செய்து 182 கிலோ அதாவது 91 சதவீத வெள்ளை பட்டுகூடுகளை உற்பத்தி செய்து கிலோ ஒன்றுக்கு 225 ரூபாய் வீதம் தென்காசி அரசு பட்டு கூடு அங்காடியில் விற்பனை செய்துள்ளார். இவர் ஒரே மாதத்தில் அதிகபட்சமாக 46 ஆயிரத்து 410 ரூபாய் வருமானம் பெற்று முன்னோடி பட்டு விவசாயியாக சாதனை படைத்துள்ளார்.இவரை போல் பட்டு விவசாயிகள் புதிய தொழில் நுட்பங்களை முறையாக கடைபிடித்து நல்ல வருமானம் பெறும்படி தென்காசி பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குநர் குளத்தூரான் பிள்ளை விவசாயிகளை கேட்டுக் கொண்டுள்ளார்நடப்பு ஆண்டில் புதிதாக பட்டு தொழில் செய்ய முன் வரும் விவசாயிகளுக்கு பட்டு வளர்ச்சி துறை மூலம் மல்பரி நாற்று நடவு மானியம் ஏக்கருக்கு 4

ஆயிரத்து 125 ரூபாயும், தனி புழு வளர்ப்பு மனை அமைக்க 25 ஆயிரம் ரூபாய் முதல் 75 ஆயிரம் ரூபாய் வரையும், சொட்டு நீர் பாசனம் அமைக்க ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாயும், 30 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள நவீன புழு வளர்ப்பு தளவாடங்களும் இலவசமாக வழங்கப்பகிறது.புதிதாக 10 லட்சம் ரூபாய் அலகு மதிப்பீட்டில் பட்டு நூற்பு ஆலை அமைக்க முன்வரும் தொழில் முனைவோருக்கு 75 சதம் மானியமாக 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. மேலும் விபரங்களுக்கு தென்காசி பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு தொடர்பு கொள்ளலாம்.

**விலைவாசி உயர்ந்தாலும் விவசாயிகளுக்கு விலை கிடைக்கவில்லை: வைகோ ஆதங்கம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 31,2010,02:17 IST

கோவில்பட்டி,: தமிழகத்தில் விலை வாசி உயர்ந்தாலும் விவசா யிகளுக்கு விலை கிடைக் கவில்லை என கோவில்பட்டியில் நடந்த மதிமுக கொடிப்பயண நிறைவு விழாவில் அதன் பொதுச் செயலாளர் வைகோ பேசினார்.
தூத்துக்குடி மாவட்டத்தில் மதிமுக சார்பில் கடந்த நான்கு நாட்களாக நடந்த கொடிப்பயண நிகழ்ச்சி நேற்று கோவில் பட்டியில் நிறை வடைந்தது. காந்தி மைதானத்தில் நடந்த விழாவிற்கு மாவட்ட இளைஞரணி செயலாளர் விநாயகா ரமேஷ் தலைமை வகித்தார். கிழக்கு ஒன்றிய செயலாளர் பவுன்மாரியப்பன், முன்னாள் கவுன்சிலர் கொம்பையா, நகர துணை செயலாளர் வனராஜன், யூனியன் கவுன்சிலர் இந்திரன், வார்டு செயலாளர்கள் சின்னத்துரை சரவணன், அப்பாவு, இலக்கிய அணி முத்துப்பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தீர்மானக்குழு செயலாளர் மோசஸ்சுந்தரம், முன்னாள் யூனியன் சேர்மன் கணேசன் ஆகியோர் வரவேற்றனர். தொடர்ந்து மதிமுக பொதுச்செயலாளர் மதிமுக கலந்து கொண்டு கொடிப் பயண நிகழ்ச்சியை நிறைவு செய்து பேசினார். அப்போது அவர் பேசியதாவது, கோவில்பட்டியில் கொ டிப்பயண நிறைவு விழா மேடையில் பேசும் போது கடந்த 1973ல் மிசாவில் கைது செய்யப்பட்டு விடுதலையாகி வந்து பேசியது ஞாபகம் வருகிறது. அப்போதும் இப்போதும் திராவிட இயக்க கொள்கைகளை காப்பாற்றவே குரல் கொடுக்கிறோம். ஆனால் தஞ்சாவூரில் பேசிய கருணாநிதி திராவிடம் என்ற சொல்லை யார் யாரோ பயன்படுத்துகிறார்கள் என்று பேசியுள்ளார். அண்ணா தோற்றுவித்த கட்சியில் அண்ணாவின் கொள்கைகள், செயல்பாடுகள் இருக்கிறதா என்று கேள்வி எழுப்பினார். தொடர்ந்து நல்லவேளையாக நாங்கள் தப்பித்து விட்டோம் என்றார். மேலும் மதிமுக எங்கே இருக்கிறது என கேட்டவர்கள் புரிந்து கொள்ளும் விதத்தில் பட்டிதொட்டி எங்கும் அனைவரிடமும் மதிமுக இருப்பதை உணர்த்தி யாரும் அழிக்க முடியாத இயக்கமாக உருவாகியுள்ளோம். தமிழகத்தில் ஆயிரக்கணக்கான கிராமங்களுக்கு சென்ற போதெல்லாம் மக்கள் மனதார வரவேற்றார்கள். தஞ்சாவூரில் கருணாநிதி பேசியதற்கு நேரடியாக சில

கேள்விகளை கேட்க விரும்புகிறேன். ராதாபுரம் பஸ் ஸ்டாண்டிற்கு காமராஜர் பெயரை வைப்பது குறித்து அதிமுக பொதுச் செயலாளர் ஜெ., கருத்து தெரிவித்த போது விமர்சனம் செய்தார்.

இப்பிரச்னையின் துவக்கத்திலேயே காமராஜர் பெயரை வைக்காமல், அவரது தாய் தந்தையின் பெயரையும், பஸ் ஸ்டாண்டிற்குள் அவர்களது சிலைகளையும் வைக்க ஏற்பாடு செய்தார். நமது நாட்டில் மன்னராட்சி முடிந்து பல காலம் ஆகிவிட்டது. நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்து 60 ஆண்டுகள் ஆன பின்னரும் ஒரு குடும்பத்தின் கட்டுப்பாட்டில் இருக்கிறோம். காமராஜருக்காக பாடுபட்டதாக கருணாநிதி சொல்வதில் துளியும் உண்மை இல்லை. காமராஜருக்கு கன்னியாகுமரியில் மணிமண்டபம் கட்டுவதற்கு அப்போதைய பிரதமர் அனுமதியளித்தும், தமிழக அரசிடம் இருந்து கோரிக்கை கடிதம் இல்லாததால் நின்றது. அதை நான் தான் பிரதமரை சந்தித்து ஒப்புதல் பெற்றுத் தந்தேன். ஆன ௦ில் எல்லாம் முடியும் தருவாயில் தானே எல்லா ஏற்பாடுகளையும் செய்ததாக கருணாநிதி தெரிவித்தார். இதுபோன்று பல்வேறு நிகழ்வுகளின் போது எப்போதுமே தான் செய்ததாக அறிக்கை விடுவார்.
நாட்டில் விலைவாசி இவ்வளவு உயர்ந்தாலும் விவசாயிகளுக்கு விலை கிடைக்க வில்லை. வரும் சட்டசபை தேர்தலில் எத்தனை கோடிகள் செலவளித்தாலும் திமுக தோற்பது உறுதியாகி விட்டது என்று மதிமுக பொதுச் செயலாளர் வை கோ பேசினார். விழாவில் துணை பொதுச் செயலாளர் நாசரேத்துரை, மா வட்ட செயலாளர் ஜோ யல், நகர செயலாளர் ரமேஷ், நகர இளைஞரணி செயலாளர் பால்ராஜ், தேனி மாவட்ட செயலாள ர் சந்திரன், மதுரை கோபிநாதன், எம்எல்ஏக்கள் சிவகாசி ஞானதாஸ், விருதுநகர் வரதராஜன், மாநில நிர்வாகிகள் கலைத்துறை பொன்ஸ்ரீராம், விவசாய அணி துணை செயலாளர்கள் சுந்தர்ராசு, வரதராஜன், இலக்கிய அணி புரவலர் முத்துச்செல்வம், கவுன்சிலர்கள் தெய்வேந்திரன், ராஜேந்திரன், குருவுத்தாய் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**ஓசூரில் முட்டைகோஸ் விலை வீழ்ச்சி: விவசாயிகள் கலக்கம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 31,2010,03:32 IST

ஓசூர்: ஓசூரில் உள்ளூர் முட்டைகோஸ் விலை கடும் வீழ்ச்சியடைந்துள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தமிழகத்தில் அதிக காய்கறிகள் உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தியாகும் தக்காளி, முட்டைகோஸ், பீன்ஸ், கேரட், உருளைகிழங்கு உள்ளிட்ட பல்வேறு காய்கறிகள் கர்நாடகா, ஆந்திரா மற்றும் தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கும் அதிகளவில் ஏற்றுமதியாகிறது.
மாவட்டத்தில் 4,000 ஏக்கரில் முட்டைகோஸ் சாகுபடி நடக்கிறது. ஓசூர் தாலுகாவில் 2,000 ஏக்கரில் விவசாயிகள் முட்டைகோஸ் சாகுபடி செய்துள்ளனர். ஓசூர், தேன்கனிக்கோட்டை

பகுதியில் ஆண்டு முழுவதும் நிலவும் குளிர்ந்த காலநிலை மற்றும் நல்ல மண் வளமும் காணப்படுவதால், விவசாயிகள் ஆண்டு முழுவதும் சாகுபடி செய்து அறுவடை செய்கின்றனர்.கடந்த இரு மாதம் முன் வரை ஒரு கிலோ முட்டைகோஸ் 10 ரூபாய் முதல் 15 ரூபாய் வரை விற்பனையானது. தற்போது, ஒரு கிலோ 3 ரூபாய்க்கு விற்பனையாகிறது. அறுவடை செலவு, பராமரிப்பு செலவு மற்றும் போக்குவரத்து செலவு ஆகியவற்றுக்கு கூட விலை கிடைக்காததால், விவசாயிகள் நஷ்டம் அடைந்துள்ளனர்.ஓசூர் அடுத்த அந்திவாடி, பூனப்பள்ளி, பாகலூர் பகுதியில் போதிய விலை கிடைக்காததால், விவசாயிகள் விளை நிலத்தில் முட்டை கோஸை அறுவடை செய்யாமல் போட்டுள்ளன. அதனால், அவை தற்போது பெய்து சாரல் மழையில் அழுகி வீணாகி வருகிறது.

இது குறித்து ஓசூர் தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் காளியப்பன் கூறுகையில், ""அன்றாட சமையல்களில் முட்டைகோஸ் பொறியல் முக்கியம் இடம் பெற்றுள்ளது. தற்போது, தமிழகத்தில் ஆடிமாதம் என்பதால், திருமணம், கிரக பிரவேசம் உள்ளிட்ட விஷேச நிகழ்ச்சிகள் எதுவும் நடக்காது. அதுபோல், கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களிலும் "ஆசனம்' மாதம் என கூறி அங்கும் பநிகழ்ச்சிகள் எதுவும் நடத்தமாட்டார்கள்.

அதனால், முட்டைகோஸ் விற்பனையில் மந்த நிலை ஏற்பட்டுள்ளது. பெரும்பாலும் முட்டைகோஸ் பொறியலுக்கு மட்டும் பயன்படுவதால், வீடுகள் மற்றும் பொது இடங்களில் நடக்கும் நிகழ்ச்சிகளுக்காக செய்யப்படும் பொறியல் சமையலை நம்பி விற்பனையாகிறது.இதே நிலை காய்கறிகள் அதிகம் விளையும் ஊட்டி, கோவை உள்ளிட்ட இடங்களிலும் நிலவுகிறது. இதனால், அங்கு இருந்து மலிவு விலை முட்டைகோஸ் ஓசூர், கிருஷ்ணகிரி மற்றும் சேலம், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு விற்பனைக்கு வர துவங்கியுள்ளது. அதனால், முட்டைகோஸ் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. ஆடிமாதம் சென்றதும், பநிகழ்ச்சிகள் நடக்க துவங்கிவிடும். அதன் பின் முட்டைகோஸ் விலைஉயரும், '' என்றார்.

**வாழை சாகுபடி குறித்த பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜூலை 31,2010,03:31 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி அடுத்த எலுமிச்சங்கிரி டாக்டர் பெருமாள் வேளாண் அறிவியல் மையத்தில் ஆகஸ்ட் 5ம் தேதி வாழை சாகுபடி குறித்த இலவச பயிற்சி முகாம் நடக்கிறது.அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் ந்தர்ராஜ் வெளியிட்ட அறிக்கை:கிருஷ்ணகிரி அடுத்த எலுமிச்சங்கிரி டாக்டர் பெருமாள் வேளாண் அறிவியல் மையத்தில் வாழையில் அதிக மகசூல் பெற உகந்த தொழில் நுட்பங்கள் குறித்த ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் வரும் ஆகஸ்ட் 5ம் தேதி நடக்கிறது.பயிற்சியில் கலந்து கொள்ள விரும்பும் விவசாயிகள் தபால் அல்லது டெலிஃபோன் மூலமாக ஆகஸ்ட் 3ம் தேதிக்குள் தங்களது பெயரை

முன்பதிவு செய்துகொள்ள வேண்டும். பயிற்சிக்கு வருவோர் பயிற்சி நாள் அன்று 9.30 மணிக்கு வேளாண் அறிவியல் மையத்தில் தங்களதுசெலவில் வந்து சேர வேண்டும். பெயர் பதிவு செய்ய விரும்புவோர் 96595 -
57716,94869-88256 ஆகிய மொபைல் எண்ணிலும் அல்லது "திட்ட ஒருங்கிணைப்பாளர், டாக்டர் பெருமாள் வேளாண்மை அறிவியல் மையம், எலுமிச்சங்கரி, மல்லிநாயனப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவ்டடம்' என்ற முகவரியில் நேரிலும் அணுகலாம்.

**ஆத்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜூலை 31,2010,03:31 IST

ஊத்தங்கரை: ஊத்தங்கரை தாலுகா எக்கூர் கிராமத்தில் ஆத்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.வேளாண் உதவி இயக்குனர் பெரியசாமி தலைமை வகித்தார். ஆத்மா சேர்மேன் விவேகானந்தன் முன்னிலை வகித்தார். விவசாயிகளுக்கு செம்மை நெல் சாகுபடி, பயிறு வகை பயிர்
கள் சாகுபடி, பயிறு வகை பயிர்களுக்கு ஊட்டமேற்றிய தொழுவுரம் இடுதல், டி.ஏ.பி., தெளித்தல், நிலக்கடலைக்கு ஜிப்சம் இடுதல், நெல் பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் நிர்வாகம் குறித்து வேளாண்மை அலுவலர் பன்னீர்செல்வம் பயிற்சி அளித்தார்.மண் மாதிரி எடுத்தல், நெல் பயிருக்கு பூஞ்சாணக்கொல்லி மருந்தை பயன்படுத்தி விதை நேர்த்தி செய்தல், பயிறு வகை பயிர்களுக்கு ரைசோபியம் கொண்டு விதை நேர்த்தி செய்தல் ஆகியவை குறித்து துணை வேளாண் அலுவலர் சீனிவாசன் செயல் விளக்கம் செய்து காட்டினார். பயிற்சியில் கலந்து கொண்ட 50 விவசாயிகளுக்கு மக்காச்சோள விதைகள் வழங்கப்பட்டன.ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் குமரேசன் செய்திருந்தார்."நாற்காலி' பிரச்னையால் ஓசூர் நகராட்சியில் பரபரப்புஓசூர்: ""புது பஸ்ஸ்டாண்ட் திறப்பு விழாவில் கவுன்சிலர்களுக்கு இருக்கை கூட போடாமல் கேவலப்படுத்தப்பட்டனர்," என ஓசூர் நகராட்சி கூட்டத்தில் காங்கிரஸ் கவுன்சிலர்கள் கண்ட
னம் தெரிவித்தனர்.ஓசூர் நகராட்சி கூட்டம் நகராட்சி தலைவர் சத்யா தலைமையில் நடந்தது. கமிஷனர் பன்னீர் செல்வம், துணை தலைவர் மாதேஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.நகராட்சி தலைவர் சத்யா (தி.மு.க.,): புதுபஸ்ஸ்டாண்ட்டை திறந்து வைத்த துணை முதல்வருக்கும், பஸ்ஸ்டாண்ட் கட்டுவதற்கு ஒத்துழைப்பு அளித்த கவுன்சிலர்களுக்கும் நன்றி தெரிவித்து கொள்கிறேன். போக்குவரத்து முக்கியத்துவம் வாய்ந்த தாலுகா ஆஃபீஸ் சாலைக்கு நகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றி காமராஜர் சாலை என பெயர் சூட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.பிரகாஷ் (காங்., ): காமராஜர் பெயர் சூட்டுவதற்கு நன்றி. ஆனால், புது பஸ் ஸ்டாண் திறப்பு விழாவில் உள்ளூர் மக்கள் பிரதிநிதிகளான கவுன்சிலர்களுக்கு இருக்கை கூட

போடாமல் அதிகாரிகள் கேவலப்படுத்தி விட்டனர். எங்கிருந்தோ வந்தவர்கள் கூட மரியாதை அளிக்கப்பட்டது.
ஒரு சில கவுன்சிலர்கள் பாஸ் கூட கிடைக்காமல் விழா அரங்கத்துக்கு வர முடியவில்லை. திறப்பு விழா கல்வெட்டில் காங்கிரஸ் எம்.எல்.ஏ., கோபிநாத், கவுன்சிலர்கள் பெயர் இடம்பெறவில்லை. இதை வன்மையாக கண்டிக்கிறேன்.நகராட்சி தலைவர் சத்யா: கல்வெட்டு முழுக்க முழுக்க நகராட்சி நிர்வாகம் அறிவுரைபடி வைக்கப்பட்டது. தலைமை, முன்னிலை, வரவேற்புரையில் இடம்பெற்றவர்கள் பெயர் மட்டும்
போடப்பட்டிருந்தது. கலெக்டர் பெயர் கூட போடவில்லை. கவுன்சிலர்கள், எம்.எல்.ஏ., பெயர் போட்ட புது கல்வெட்டு புது பஸ் ஸ்டாண்ட்டில் இன்னும் ஓரிரு நாளில் வைக்கப்படும்.அக்ரோநாகராஜ்: ஓசூரில் தெலுங்கு, கன்னடம் பேம் மக்களும் அதிகம் வசிக்கின்றனர். அதனால், புது பஸ் ஸ்டாண்ட்டில் பஸ் நிறுத்துமிடம் பெயர்களை தெலுங்கு, கன்னடம் மொழியிலும் எழுத வேண்டும்.நகராட்சி தலைவர் சத்யா: தெலுங்கில் எழுதுவதற்கு மட்டும் நடவடிக்கை எடுக்கப்படும்.துணை தலைவர் மாதேஸ்வரன் (தி.மு.க.,): நகரில் கொகள் அதிகமாகி விட்டது. பகல் நேரத்தில் கூட கொக்கள் கடிக்கும் அவலம் உள்ளது. கொ கடித்து பலர் டெங்கு காய்ச்சல் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். கொக்களை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.நகராட்சி தலைவர் சத்யா: டெங்கு பாதிப்பு இருப்பதாக எந்த மருத்துவமனைகளில் இருந்தும் புகார் வரவில்லை. இருந்தாலும், கொக்களை அழிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**பாசன சங்க கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 31,2010,00:23 IST

திருப்பூர்:தாராபுரத்தை அடுத்த கோவிந்தாபுரம் புதிய அம ராவதி பிரதான பாசன கால்வாய் சங்க நிர்வாகிகள் கூட்டம், தலைவர் பார்த்தசாரதி தலைமையில் நடந்தது."குடிநீருக்காகவும், காய்ந்து கிடக்கும் தென்னை, கரும்பு, பயிர்களை காக்க உயிர் தண்ணீராக, புதிய அமராவதி பாசனத்துக்கு 10 நாட்கள் தண்ணீர் திறந்து விட்டதற்கு, தமிழக முதல்வர், துணை முதல்வர், நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு நன்றி தெரிவித்து' தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**வெங்காயத்திற்கு நல்ல விலை இல்லை:சாகுபடி செய்த விவசாயிகள் வேதனை**

பதிவு செய்த நாள் : ஜூலை 31,2010,00:05 IST

உடுமலை:உடுமலை பகுதியில் சாகுபடி செய்த சின்ன வெங்காயத்திற்கு நல்ல விலை கிடைக்காததால், விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர். மழையில் அறுவடை

துவங்கியுள்ளதால், இருப்பு வைக்கவும் முடியாமல், அழுகி வருகிறது.உடுமலை பகுதிகளில் இறவை பாசனத்தில் ஆண்டு முழுவதும் சின்ன வெங்காயம் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. இந்தாண்டு, பி.ஏ.பி., முதலாம் மண்டல பாசனத்தில், அதிகளவு சின்னவெங்காயம் பயிரிடப்பட்டது.இந்தாண்டு, கடும் வறட்சி நிலவியதால், தண்ணீர் பற்றாக்குறை, நோய் தாக்குதல் உட்பட பல்வேறு பிரச்னைகளால் வெங்காய சாகுபடி பாதித்தது. நுனி கருகல் மற்றும் பயிர் பச்சையம் இழத்தல் என அதிகளவு வெங்காய சாகுபடி பாதித்தது. விவசாய கூலியாட்கள் பற்றாக்குறையும் விவசாயிகளை பாதிப்படையச்செய்தது.பயிர் சாகுபடியில், அதிக முதலீடு உள்ள வெங்காய சாகுபடி மேற்கொள்ள ஏக்கருக்கு 40 ஆயிரம் வரை செலவு பிடித்து வரும் நிலையில், இந்தாண்டு கூடுதல் செலவு ஏற்பட்டதோடு, மகசூலும் குறைந்துள்ளது. இதனால், வெங்காயம் சாகுபடி செய்த விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.

விவசாயிகள் கூறியதாவது:90 நாள் பயிரான வெங்காயம் நல்ல முறையில் சாகுபடி பணி மேற் கொண் டால், ஏக்கருக்கு 70 கிலோ கொண்ட 100 மூட்டை வரை கிடைக்கும். ஆனால், இந்தாண்டு சாகுபடியின் போது, போதிய மழையில்லாதது, நோய் தாக்குதல் போன்ற காரணங்களினால், மகசூல் பாதியாக குறைந்துள்ளது.

இந்நிலையில், விலையும் குறைந்துள் ளதால், முதலீடு கூட எடுக்க முடியாத நிலை உள்ளது. ஒரு கிலோ வெங்காயம் 9 ரூபாய் முதல் 15 ரூபாய் வரை மட்டுமே விற்பனையாகிறது. மகசூலும் குறைந்து 4 ஆயிரம் கிலோ வெங்காயம் கூட கிடைப்பதில்லை. இதனால், வெங்காய சாகுபடி செய்த விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 20 ஆயிரம் ரூபாய் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

தற்போது தென்மேற்கு பருவ மழையும் தீவிரமடைந்துள்ளதால், அறுவடைசெய் யும் போதே வெங்காயம் ஈரப்பதத்துடன் உள்ளது. இதனால், விலை கிடைக்கும் வரை இருப்பு வைத்து விற்பனை செய்ய முடியாத நிலை உள்ளது. இருப்பு வைத் தால், அழுகி விடும் அபாயம் உள்ளது. இதனால்,கிடைத்த விலைக்கு விற்பனை செய்ய வேண்டிய நிலை உள்ளது. இவ்வாறு விவசாயிகள் தெரிவித்தனர்.

**இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் தகவல் நெல், கரும்பு விளையும் பகுதிகளில் அதிக அளவு மழை பெய்ய வாய்ப்பு**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி

நம் நாட்டில் நெல், கரும்பு விளையும் முக்கிய பகுதிகளில் அதிக அளவு மழை பெய்ய வாய்ப்புள்ளது என இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது. இந்த இரண்டு முக்கிய விளைபொருள்களின் உற்பத்தியில் இந்தியா சர்வதேச அளவில் இரண்டாவது இடத்தில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தானியக் களஞ்சியம்

பஞ்சாப் மற்றும் அரியானா ஆகிய மாநிலங்கள் நாட்டின் தானியக் களஞ்சியம் என்று அழைக்கப்படுகின்றன. உத்தரபிரதேச மாநிலம் கரும்பு உற்பத்தியில் முதலிடத்தில் உள்ளது. ஜூன்–செப்டம்பர் மாத காலத்தில் பெய்யும் பருவமழை நாட்டில் உள்ள விளைநிலங்களுக்கு 60 சதவீத நீர்ப்பாசனத் தேவையை பூர்த்தி செய்கிறது.

இம்மாதம் 28–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் மழை சராசரி அளவுக்கு 38 சதவீதம் அதிகமாக பெய்துள்ளது. எனினும், அதற்கு முந்தைய வாரத்தில் 17 சதவீதம் மழை குறைவாக இருந்தது. நடப்பு ஆண்டில் பருவமழை நன்கு இருக்கும் என்ற மதிப்பீடுகளால் வேளாண் உற்பத்தி சிறப்பான அளவில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நெல் உற்பத்தி அதிகரிக்கும் நிலையில் மத்திய அரசு அரிசி ஏற்றுமதி மீதான தடையையும் நீக்க வாய்ப்புள்ளது என ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

மழை அளவு அதிகரிக்கத் தொடங்கியுள்ள நிலையில், ஜூலை 29–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், நாட்டின் முக்கிய நீர்த்தேக்கங்கள் 27 சதவீதம் நிரம்பியுள்ளன.

நெல் உற்பத்தி

நடப்பு 2010–11–ஆம் ஆண்டு வேளாண் பருவங்களில் (கரீஃப் மற்றும் ரபி) இந்தியாவின் நெல் உற்பத்தி 9.90 கோடி டன்னாக இருக்கும் என அமெரிக்க வேளாண் துறை மதிப்பீடு செய்துள்ளது. அதாவது, சென்ற ஆண்டைக் காட்டிலும் உற்பத்தி 13 சதவீதம் அதிகமாக இருக்கும் என முன்னறிவிப்பு செய்துள்ளது.

சென்ற ஆண்டு வேளாண் பருவங்களில் நாட்டின் நெல் உற்பத்தி 8.75 கோடி டன்னாக இருந்தது. இது, அதற்கு முந்தைய ஐந்து ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு பெரும் சரிவாகும். அவ்வாண்டில் பருவமழை தவறியதே இதற்கு முக்கிய காரணமாகும். நடப்பு ஆண்டில் நெல் பயிரிடும் பரப்பளவு 10 சதவீதம் உயர்ந்து 4.50 கோடி ஹெக்டேராக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**குறைந்த வட்டியில் வேளாண் கடன் வங்கிகளுக்கு ரூ.4,868 கோடி மானியம் வழங்க அரசு முடிவு**




இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி

விவசாயிகளுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்குவதால், பொதுத் துறை வங்கிகளுக்கு ரூ.4,868 கோடி மானியம் வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இந்த தொகையை தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், மண்டல ஊரக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் மற்றும் நபார்டு வங்கி பெற உள்ளன. நடப்பு நிதி ஆண்டில் விவசாயிகளுக்கு ஆண்டுக்கு 7 சதவீத வட்டியில் குறுகிய கால பயிர்க் கடனுக்கு உறுதி செய்யும் வகையில் அரசு இந்த நிதியை வழங்க உள்ளது.

2 சதவீத மானியம்

மத்திய அரசு விவசாய கடன்களுக்கு 2 சதவீத மானியம் வழங்கவில்லை என்றால் வங்கிகள் 9 சதவீத வட்டியில் கடன் வழங்கும் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த 2006–07–ஆம் நிதி ஆண்டிலிருந்து மத்திய அரசு குறைந்த வட்டியில் விவசாயிகள் வாங்கும் குறுகிய கால பயிர்க் கடனுக்காக வங்கிகளுக்கு மானியம் வழங்கி வருகிறது. விவசாயிகளுக்கு விரைவாகவும், எளிதாகவும் கடன் வசதி கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம், பொதுத் துறை வங்கிகள், மண்டல ஊரக வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகளுக்காக நடப்பு 2010–11–ஆம் நிதி ஆண்டிலும் தொடரப்பட்டுள்ளது. சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில், கடனை குறித்த காலத்தில் திரும்ப செலுத்திய விவசாயிகளுக்கு, கடனுக்கான வட்டியில் மேலும் ஒரு சதவீதம் குறைக்கப்பட்டது. இந்த சலுகை நடப்பு நிதி ஆண்டில் 2 சதவீதமாக்கப்படுகிறது. ஆக, முந்தைய ஆண்டுகளில் கடனை சரிவர திரும்ப செலுத்திய விவசாயிகள் வாங்கும் கடனுக்கு ஆண்டுக்கு 5 சதவீத வட்டி செலுத்தினால் போதுமானது.

கடன் இலக்கு

கடந்த சில ஆண்டுகளாக, மத்திய அரசு நிர்ணயித்த அளவில் வேளாண் கடன் இலக்குகளை வங்கிகள் வெற்றிகரமாக அடைந்து வருகின்றன. நடப்பு நிதி ஆண்டில் வங்கிகள் ரூ.3.75 லட்சம் கோடி வேளாண் கடன் வழங்க வேண்டும் என இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இது, சென்ற நிதி ஆண்டில் ரூ.3.25 லட்சம் கோடியாக இருந்தது.